REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ... ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆவணி 27உ வியாழன் (12—9—57) ★ ☆ வெளியூர்: ஆவணி 28உ வெள்ளி (13—9—57) [இதழ் 77

சரக்குகளை விற்பனை செய்யுமாறு
வியாபாரிகளை நிர்ப்பந்திக்க சர்க்காருக்கு அதிகாரம்

மக்கள் சபையில் மசோதா

புதுடில்லி, செப். 10—

வியாபாரிகளை, தங்களிடமுள்ள சரக்குகளை சர்க்காருக்கோ, சர்க்கார் அதிகாரிகள் 'ஏஜெண்டு'களுக்கோ விற்பனை செய்யவேண்டும் என்று கட்டாயப்படுத்த, அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தின்கீழ் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு என்பதைத் தெளிவாக்குகிற மசோதா ஒன்றினை, மக்கள் சபையில், சட்ட மந்திரி ஏ. கே. சென் கொண்டு வந்திருக்கிறார்.

வியர்வை வீண்போனதில்லை -- கண்ணீர் சக்தி இழந்ததில்லை!

ஏழை தோற்றதில்லை!

அறம் வென்றே இருக்கிறது!

நங்கவரம் அறப்போர் வெற்றிகுறித்து கருணாநிதி

நங்கவரம் அறப்போரில் உழவர்கள் பெரும் வெற்றிபெற்று விட்டனர். இந்த வெற்றிக்கு உழவர்கள் ஏற்றுக்கொண்ட இடர்களும், அறப்போர்த் தலைவர்கள் தாங்கிக்கொண்ட தாக்குதல் கணைகளும், இழிமொழிகளும் ஏராளம்! என்னும், வெற்றிப் பாதையை நாடிச்செல்லும் இலட்சிய நோக்குடையோரின் கடமை உள்ளத்தை எந்த முனைத தாக்குதலும் அசைத்ததில்லையென்பதையே நங்கவரம் அறப்போரின் முடிவு நமக்கும், நாட்டுக்கும் பெருமிதத்தோடு அறிவிக்கிறது.

மாட்டேர் வாரதாரர்களாய் சாகுபடி செய்யும் உரிமை பெற்றிருந்த உழவர்கள், இனி கூலிகளாய்த்தான் நடத்தப்படுவர் என அறிவிக்கப்பட்டு, நிலத்திலிருந்து வெளியேற்றப் பட்டனர்.

'அவர்களைப் பழைய முறைப்படி நடத்திடவேண்டும்; நிலத்திலிருந்து வெளியேற்றக் கூடாது' என வேண்டுகோள் விடப்பட்டது. அந்தக் குரல் முதலில் அலட்சியப்படுத்தப் பட்டது.

அமைச்சர்களை, அதிகாரிகளைச் சந்தித்து, பிரச்சினையில் நல்ல முடிவு காணுமாறு பலமுறை வேண்டப்பட்டது. அமைச்சர்கள் முயற்சிப்பதாகச் சொன்னார்கள்; அதிகாரிகள் முயற்சித்தனர். ஆயினும், உழவர்களுக்கு நல்ல தீர்ப்பு கிடைக்கவில்லை. எல்லா முயற்சிகளும் தோல்வியுற்ற பின்னர்தான், சென்ற திங்கள் 25-ம் நாள் விவசாயிகள் முன்னேற்ற சங்கம் அறப்போரில் குதித்தது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவுதர முன்வந்தது. கழகத்தின் சட்டமன்ற உறுப்பினன் என்ற முறையில் நான் இந்தப் பிரச்சினையில் ஆரம்பமுதல் ஈடுபாடு கொண்டதுபோலவே அறப்போரிலும் ஈடுபாடு கொண்டேன். கழகம் கட்டிக் காக்கும் கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு ஆகியவற்றிற்கு எள்ளளவு முனை முறிவும் ஏற்படாதவாறு அறப்போர் அமைதியாகவே நடைபெற எங்களால் ஆன எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டோம்.

உழவர்கள் நூற்றைம்பதுக்கு மேற்பட்டோர் கைது செய்யப் பட்டனர்; தாய்மார்கள் சிறை பிடிக்கப்பட்டனர்; ஒருநாள் கண்ணீர்ப்புகை, தடியடி, துப்பாக்கிப் பிரயோகம் வரையிலே நிலைமை வளர்ந்து, இறுதியில், கழனிகள் குருதிக் குளங்களாகும் கொடுமை நடைபெறுமல் தவிர்க்கப்பட்டுவிட்டது. அறப்போரில் ஈடுபட்டவர்களைப் போலவே போலீஸ் அதிகாரிகள் சிலரும் அமைதியைக் காக்க அரும்பாடுபட்டனர். கம்புக்குள் செருகியிருந்த கத்தியுடன் ஒருவர் போலீசாரால் பிடிபட்டார்; அவர் நிலப்பிரபுக்களின் ஆள் எனவும் தெரியலாயிற்று. நாளுக்குநாள் நிலைமை மோசமாகும் சூழ்நிலையில் உருவாயிற்று.

அதிகாரிகள், சமரச முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். அது, உழவர்களின் கோரிக்கைகளை நிலப்பிரபுக்கள் ஏற்றுக்கொண்டனர் என்ற அளவில் பெரும் வெற்றியைத் தந்திருக்கிறது.

திரு. ராமநாத அய்யர் பண்ணையைப் பொறுத்தமட்டில் ஏற்பட்டுள்ள நல்ல முடிவையொட்டி, மற்றும் நங்கவரம் பகுதியில் விவசாயிகள் முன்னேற்ற சங்க உழவர்கள் பணிபுரியும் பண்ணைகளிலும் நல்ல முடிவு ஏற்படும்.

அதுமட்டுமன்றி, நங்கவரத்தைச் சுற்றியுள்ள வேறு பல ஊர்களின் பிரச்சினைகளும் இந்த முடிவையே எடுத்துக்காட்டாகவைத்து நல்ல தீர்ப்பு காண வாய்ப்பு ஏற்படுமென்றும் நம்புவதில் தவறில்லை.

ஐம்பத்தாறு ஏகர் நிலம் மட்டும் பண்ணையார் சொந்த சாகுபடிக்கு வைத்துக்கொள்ளலாம் என ஒப்பந்தம் கூறுகிறது. உழவர்களின் கோரிக்கையிலும் அதுபற்றி தெளிவாக்கப்பட்டிருக்கிறது. இதில் மிகப் பெரும் வெற்றி எதுவெனில், ஒவ்வொரு உழவனுக்கும் ஒன்றரை ஏகர் நிலம் பிரித்துக் கொடுக்கப்பட்டு அவன், குத்தகை சாகுபடிக்காரனாக ஏற்றுக் கொள்ளப்படுகிறான். மீதியுள்ள நிலத்திற்கு அவன் மாட்டேர் வார சாகுபடி முறைமைக்கும் அனுமதிக்கப்படுகிறான். அப்படி சாகுபடி செய்யும் நிலம், இதுவரை அவன் சாகுபடி செய்த பழைய நிலமாகவே இருக்க வேண்டும் என்ற கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

அறப்போரில் கைது செய்யப் பட்ட உழவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள்.

இந்த நல்முடிவு தோன்றக் காரணமாயிருந்தோர் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அறப்போருக்கு ஆதரவு நல்கியதை வைத்தும், அண்ணா அவர்கள் குளித்தலை கூட்டத்தில் 'கடைசி வேண்டுகோள்' விடுத்ததைக்கொண்டும், மாற்றுக் கட்சியினர், 'தி.மு. கழகம் தனது செல்வாக்கை வளர்த்துக்கொள்ளவே இப்போராட்டத்தைத் துவங்குகிறது' என முழங்கினர்; மந்திரிகள் போகுமிடமெல்லாம் பேசினர்.

உழவர்கள் — நிலமுடையோர் இருவருக்குமிடையே நல் உறவை முறித்திடும் எண்ணம் என்றும் நமக்கிருந்ததில்லை. உழவர்களின் உரிமை பறிக்கப்பட்டு, அவர்கள் வயிறு காய்ந்து கண்ணீர் மல்கி நிற்கின்றனரே எனக் கண்டுதான் அறப்போருக்கு ஆதரவு வழங்கப்பட்டது. திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் அம்பில்-தர்மலிங்கமும், மாவட்டக் கழகத்தினரும் எல்லாவகையிலும் ஆதரவுதர முன்வந்தனர்.

யாருக்கும், போராட்டத்தை வைத்து கட்சிக்குப் புகழ் தேடவேண்டுமென்ற விழைவு இல்லை. உழவனின் கண்ணீர் துடைக்கப்பட்டால் போதும் என்பதே நோக்கமாயிருந்தது. விவசாயிகள் முன்னேற்றச் சங்கத் தலைவர் முத்துகிருஷ்ணன், செயலாளர் கவுண்டம்பட்டி-முத்து ஆகியோரின் அரிய தொண்டும், உழவர் பெருங்குடி மக்களுக்குப் பணிபுரியும் ஆர்வமிக்கத் தோழர்களின் பணியும் வீண்போகவில்லை; வெற்றி வாகை சூடியது.

மாவட்ட அதிகாரிகள் நமது நன்றிக்குரியவர்கள். அறப்போரை ஆதரித்து உழவர்களுக்குக் கைகொடுத்த முற்போக்கு நாளிதழ்களும், இயக்கத்தின் கிழமை ஏடுகளும் உழவர்களின் அன்பைப் பெறுகின்றன. இறுதியில் சமாசத்திற்கு வந்து உழவர் உரிமையைத் தந்த நிலச் சொந்தக்காரரும் பாராட்டப்பட வேண்டியவரே!

வியர்வை வீண்போனதில்லை — கண்ணீர் சக்தியிழந்ததில்லை—ஏழை தோற்றதில்லை—அறம் வென்றேயிருக்கிறது என்பதின் அடையாளம் நங்கவ[illegible] வெற்றி!

அன்புள்ள,
மு. கருணாநிதி

கட்டணம் குறையாது!

'நிர்வாகம், மற்றும் இயக்கச் செலவுகள் அதிகமாக இருப்பதால் விவசாயக் காரியங்களுக்காக மின்சாரம் வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிற கட்டண விகிதங்களை மாற்றுவதற்கில்லை' என்று சென்னை மின்சார போர்டு, முடிவு செய்துவிட்டது.

'நாம் அனைவரும் திராவிட மக்களே'

கேரளக் கல்வி அமைச்சர் எடுத்துக் காட்டுகிறார்

"தமிழுக்கும், மலையாள மொழிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஆதியில் நாமனைவரும் ஒரே மொழி பேசிய ஒரே கலாசாரமும், பண்பாடும் கொண்ட திராவிட மக்களாக இருந்தோம்.

"தமிழின் பெருங்காப்பியங்களாகிய மணிமேகலையும் சிலப்பதிகாரமும் மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அந்த இரண்டு காப்பியங்களும் சேர நாடாகிய கேரளத்திலிருந்துதான் எழுதப்பட்டன."

—இவ்வாறு, கேரளக் கல்வி அமைச்சர் திரு. ஜோசப் முண்டசேரி, திருவொற்றியூரில் பாரதி சிலையைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாக, 9—9—57-ந் தேதி 'ஜனசக்தி' இதழில் செய்தி வெளியாகியுள்ளது.

கம்யூனிஸ்டு நாடுகளுடன் பேரம்

கஷ்டமாக இருக்கிறது என்கிறார் டெல்லி மந்திரி

புதுடெல்லி, செப். 11—

'கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு மேலும் அதிகமான தேயிலை விற்பதற்கு ஏன் சர்க்கார் முயற்சிக்கக்கூடாது?' என்று மக்கள் சபையில் கம்யூனிஸ்டு ஒருவர் கேட்டார்.

பதிலளித்த மந்திரி நித்தியானந்த கனுங்கோ, 'கம்யூனிஸ்டு நாடுகளிடம் பேரம் கொள்வது மிகக் கஷ்டமாயிருக்கிறது; அவர்கள், எங்கு சரக்குகள் மலிவாகக் கிடைக்கின்றனவோ அங்குதான் வாங்குவர்; நாம் அவர்களுடன் கடந்த இரண்டுமூன்று ஆண்டுகளாக பேரம் செய்து வருகிறோம்; அவர்கள் எப்படி நம்மிடம் மசியவில்லை என்பது நமக்குத் தெரிந்ததுதான்' என்றும் கூறியிருக்கிறார்.

வாக்குச் சீட்டுகளில் குறியிடும் முறை

புதுடில்லி, செப். 11—

எதிர்காலத் தேர்தல்களில் குறியிடும் முறையை அமுல் நடத்தத் தேர்தல் குழுவிற்கு மக்கள் சபை அதிகாரமளித்துள்ளது.

நாட்டில் கல்வியறிவு பெறாதவர்கள் அதிகப்படியாக இருப்பதால் குறி போடும் முறையை எதிர்க்கட்சியினர் எதிர்த்துப் பேசினர்.

ஆனால் சட்ட அமைச்சர் ஏ. கே. சென் குறி போடும் முறை நாட்டுக்கு நல்லது என்றும், நடைபெற்ற இடைத் தேர்தல்களில் இந்த முறை நல்ல பலனை தந்துள்ளது என்றும் தெரிவித்தார்.

அவர் வீரம் காணீர்!

வானமே வில்லாக வளைப்பார் அந்த
வல்லமை மிகக்கொண்ட சொல்லால் வல்லார்
மானமே பறித்திட்ட வடவர் போக்கை
மாற்றிடவோ அவராலே ஆகவில்லை!
மண்டியு மிட்டேதான் கேட்டார் அந்த
மலைவளம் மிகவும்தான் கொண்ட நாடு
மறவர்வாழ் தேவிகுளம், பீர்மேடு செல்வக்காடு;
'உம்மவர்; தமிழர், உளர்அங்கு நிரம்ப
அறிவோம் ஆனல், உமக்கு அஃதுஇல்லை;
உத்திரவு! அறிந்திடுக!' என்றார் நேரு
'என்னிக்கொள்வீர், இப்போது, ஐயா!' என்று
ஏழெட்டு காரணங்கள் போட்டு விட்டு
இங்கு வந்து வாய்நீளம் காட்டுகின்றார்
இதுவென்ன வீரமோ?—அறிந்தோர் கூறீர்
'தென்னாடு தேய்வுறுது தடுத்தே தீர்வேன்;
தேடுவேன் அதற்கான பணத்தை' என்று
தெந்தினம் தினந்தினம் பாடி விட்டு,
'தேவனே! தேசத்தின் தலைவா!' என்றெல்லாந்தான்
அர்ச்சித்து அடிதொட்டு கேட்டார், அந்தோ!
அரைஆயிரம் கோடிக்கும் குறைவாய் அன்று.
'ஆகா! அவ்வளவா? உமக்கென்ன ஆசை ஐயா!
அளித்திடுவோம் ஒரு நூற்றைம்பதுவே' என்று
ஓங்காரக் கூச்சலுடன் நேரு கூற
ஓடோடி இங்குவந்து பதுங்கிக் கொண்டார்!
ஊருரும் போய்இன்று உருட்டிப் பேசி
உள்ளநிலை மறைத்திடவே முயன்று வாரார்
சென்னைக்குத் 'தமிழ்நாடு' என்றே பெயரும்
செதுக்கிடவும் எம்மால்தான் ஆகும் என்று
தெரிவித்து, கைவிரித்தல், என்ன கூற்றோ!
தெளிவுள்ளோர் அனைவருமே தெரிந்து கூறீர்!!

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 12—9—57 வியாழன்

புள்ளி விவரங்களின் இலட்சணம்!

★

ஆறு இலக்கத்தில் ஒரு எண்ணிக்கையைச் சுட்டிக்காட்டி, இவ்வளவு பெரிய தொகையைச் செலவிட்டு, மூன்று இலக்க எண்ணிக்கையிலிருந்த உற்பத்தியை ஐந்து இலக்க எண்ணிக்கையாக உயர்த்தியிருக்கிறோம் என்று ஏட்டளவில் உள்ள சில புள்ளிவிவரங்களைக் காட்டி தங்கள் 'சாதனை'களுக்குப் பெருமை தேட முற்படும் ஆட்சியாளருக்கு, ஆந்திர முதல்வர் சஞ்சிவரெட்டி அவர்களது புள்ளிவிவரம் பற்றிய மதிப்பீடு, பெரும் அதிர்ச்சியைத் தந்திருக்கும்.

இன்றையப் பொருளாதார அமைப்பில் புள்ளிவிவரங்களின் பெரும் பங்கினை வலியுறுத்தியுள்ள அவர், அந்தப் புள்ளிவிவரங்களின் இன்றைய இலட்சணத்திற்கு ஒரு 'நற்சான்று' வழங்கியிருக்கிறார்.

'அவற்றில் எனக்கு நம்பிக்கை இல்லை...சர்க்கார் தரும் புள்ளிவிவரங்களை நம்புவதற்கில்லை' என்று, பாதுகாப்பான வார்த்தைகளைத் தேடி, உண்மையைப் பொதித்துவைக்க விரும்பாமல் சஞ்சீவியார், பட்டவர்த்தனமாகவே தெரிவித்திருப்பதின் மூலம் பலரது பாராட்டுதலுக்கும் உரியவராகிறார்.

இந்த இலட்சணத்திலிருக்கும் புள்ளிவிவரங்களை அள்ளித் தரும் மந்திரிமார்களின் பேச்சுக்களில் மயங்க மறுப்பவர்களை ஏதும் தெரியாதவர்கள் என ஏசித் திரியும், 'சுப்பிரமணியங்களுக்கு' சஞ்சீவியாரின் புள்ளிவிவரம் பற்றிய கருத்து, பேரிடியாகக்கூட இருந்திருக்கும்.

சர்க்கார் தரும் புள்ளிவிவரங்களை நம்புவதற்கில்லை என்று கூறுகிற சஞ்சீவரெட்டி, ஆந்திர மாநிலத்தின் முதலமைச்சர் என்பதில்தான், விசேஷம் இருக்கிறது. சஞ்சீவியாரும் தனது கருத்துக்கு, ஆதாரங்களைக் கூறாமல் இல்லை. அவற்றை இந்த இதழின் வேறொரு இடத்தில் வெளியிட்டிருக்கிறோம். அவை காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கு அதிர்ச்சி தருவனவாக இருப்பினும், அவர்கள் ஆழ்ந்து சிந்திப்பதற்கும் உதவவேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

சாதாரண மக்களை — 'கஞ்சி குடிப்பதற்கிலார், அதன் காரணங்கள் இவை என்னும் அறிவுமிலார்' என்ற நிலையிலிருக்கும் மக்களை — அவர்கள் புரிந்து கொள்ளமுடியாத, சில கணக்குகளைச் சுட்டிக் காட்டி, அவர்களது வாழ்வில் பெரும் மாற்றங்களைத் தோற்றுவிக்க அளவிடற்கரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நம்ப செய்ய, இந்தப் புள்ளிவி[illegible]களை, காங்கிரஸ் ஆளவந்த[illegible]ள் பயன்படுத்துகிறார்கள் [illegible]ன்று குற்றஞ்சாட்டுவதற்கு, கடந்த காலத்தில் பல சந்தர்ப்பங்கள் இருந்திருக்கின்றன. மேலும் [illegible]களை [illegible]ட்சியின் குறை[illegible]கும், தவறுகளுக்கும் ஒரு பெரும் திரைச்சீலையாகவும், இந்தப் புள்ளிவிவரங்களைப் பயன்படுத்த இடைவிடாது அவர்கள் முயற்சித்திருக்கின்றனர்.

இந்தப் போக்கிற்கு, சஞ்சீவரெட்டி அவர்களின் புள்ளிவிவரம் பற்றிய மதிப்பீடு, பலமானதோர் சாட்டையடியாக அமைந்திருக்கிறது.

சர்க்கார் தரும் புள்ளிவிவரங்களை நம்புவதற்கில்லை என்ற சஞ்சீவ ரெட்டியாரின் கருத்து, ஏட்டுக்கணக்கில், நாட்டு நிலையைப் பார்க்க விரும்புகிறவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாகவும் அமைந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது.

'புள்ளி விவரச் சேகரிப்பு நமது நாட்டில் இன்னும் குழந்தைப் பருவத்தில்தான் இருக்கிறது. இந்த முறையே, குறையுடையதாகும்' என்று நமது அண்ணா அவர்கள், அண்மையில் கருத்தறிவித்தார்கள். இது ஒரு எதிர்க்கட்சித் தலைவரின், விரோத மனத்திலிருந்து பிறந்தது அல்ல; உண்மையின் படப்பிடிப்புத்தான் என்பதை, ஆந்திர முதலமைச்சரின் ஒளிவு மறைவு இல்லாத விளக்கம் தெளிவுபடுத்தியிருக்கிறது.

நாட்டு மக்களை வாட்டி வதைக்கும் கொடிய பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேட முற்படும்போது, ஆட்சியாளர்கள் முதற் கட்டத்திலேயே பெருந் தவறு ஒன்றைத்தான் 'பிள்ளையார் சுழி'யாக்கிக்கொள்கிறார்கள்; பிரச்சினைகளைப் பற்றிய விவரங்கள், முறையாக—சரியாகச் சேகரிக்கப்பட்டவை என்ற அசட்டு நம்பிக்கையில் பிரச்சினைகளை அணுக முற்படும் போக்குத்தான் அந்தத் தவறு.

இந்த முதல் தவறு முடிந்தவரையில் தவிர்க்கப்பட்டாலன்றி, பிரச்சினையின் முழுஉருவத்தையோ, தோற்றத்தையோ காணமுடியாது என்பதை மறைத்துப் பயனில்லை. இதன் விளைவுதான், பிரச்சினைகளுக்குப் பரிகாரமாக மேற்கொள்ளப்படுகிற நடவடிக்கைகள், அவை எவ்வளவு தீவிரமானவையாக இருந்தபோதிலும், எத்தனை இதயசுத்தியோடு மேற்கொள்ளப்பட்டாலும், எதிர்பார்க்கிற விளைவுகளை, பலன்களைப் பெறாமல் போய்விடுகின்றன.

எனவே நவீன காலத்தில், புள்ளிவிவரங்கள் எல்லா அரசாங்க நடவடிக்கைகளுக்கும் இன்றியமையாதனவாக இருப்பினும், அவை சேகரிக்கப்படும் முறையில், புரட்சிகரமானமாறு[illegible]ல்கள் ஏற்பட்டு, முடிந்தவரை [illegible]ழுங்கு நிலவ ஏற்பாடு செய்தாலன்றி, அவற்றை அதிகம் நம்பிப் பயன் இல்லை. இதையும், இந்த இலட்சணத்திலிருக்கும் புள்ளிவிவரங்களைக் காட்டியே, மக்களிடை மனமயக்கத்தை உண்டுபண்ணிவிட முடியாது என்பதையும், காங்கிரஸ் ஆளவந்தார்கள் உணருவதற்கு சஞ்சீவ ரெட்டியின் துணிகரமான கருத்து, துணைபுரிந்தால் நல்லது.

'சர்க்கார் தரும் புள்ளி விவரங்களை நம்புவதற்கில்லை'

'அவற்றை நான் மதிப்பதில்லை'

'புள்ளிவிவர சேகரிப்பு முறையிலேயே குறை இருக்கிறது'

ஆந்திர முதல்வர் சஞ்சீவ ரெட்டி கருத்துரை

ஐதராபாத், செப். 8—

தற்காலப் புள்ளிவிவரங்களை நான் மதிப்பதில்லை என்பதுடன், அவற்றில் எனக்கு நம்பிக்கையும் கிடையாது. அவை எப்போதும் தவறுகவே இருக்கின்றன; மேலும் சர்க்காரின் புள்ளிவிவரங்கள், நம்பவே முடியாதவையாயிருக்கின்றன. இந்த நிலைக்கு என்ன காரணம் என்பது எனக்குத் தெரியவில்லை.

புள்ளிவிவரம் சேகரிக்கும் அதிகாரிகளின், நிபுணர்களின் இடைவிடாத முயற்சிக் குறைவு இதற்குக் காரணமாயிருக்கலாம்; அல்லது, புள்ளிவிவரம் சேகரிக்கும் முறையிலேயே தவறு அல்லது குறைபாடு இருக்கவேண்டும்" என்று ஆந்திர முதன் மந்திரி சஞ்சீவ ரெட்டி குறிப்பிட்டிருக்கிறார்.

ஐதராபாத் பொருளாதாரக் கழகத்தில், பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவரத் துறையில் எம். எஸ். சி., மற்றும் எம்.ஏ. ஆராய்ச்சிப் பட்டப்படிப்பு வகுப்புகளைத் துவக்கிவைத்துப் பேசிய அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"1953—54-ம் ஆண்டுகளில், நாட்டில், கோடிக்கணக்கான டன் உணவுப் பொருள் பற்றாக் குறையாக இருப்பதாக அதிகாரபூர்வமான புள்ளிவிவரங்கள் தெரிவித்தன; ஆனல், காலஞ்சென்ற ரபி அகமத் கித்வாய் அவர்கள் நாட்டில் ஏராளமான உணவுப் பொருள் இருப்பதாக அறிவித்து, உணவுக் 'கண்ட்ரோல்'களை ரத்து செய்தார். கித்வாய் அவர்கள் புள்ளிவிவரங்களை நம்பியிருந்தால் உணவுக் கட்டுப்பாடுகளை நீக்கியிருக்கமாட்டார்.

"அதேபோல இப்போதும், உணவுத் தட்டுப்பாடு இருப்பதாக ஓலமிடப்படுகிறது, ஆனல், நாட்டில் உணவுப் பற்றாக்குறை அதிகமிருப்பதாக நான் கருதவில்லை. அப்படி ஏதேனும் பற்றாக்குறை இருந்தால்கூட அது செயற்கையானது; சிலரால் உருவாக்கப்படுவதாகும்.

"இலட்சக் கணக்கான ஏழை—எளிய மக்களைக் கொள்ளையடித்து இலாபம் சம்பாதிக்க விரும்பும் சில வியாபாரிகளின் பேராசைதான் அதற்குக் காரணமாகும்.

"எனவேதான், பொருளாதாரம், புள்ளிவிவரம் இவற்றை மருவறக் கற்றவர்கள், நிபுணர்கள் ஏராளமாகத் தேவைப்படுகிறார்கள். புள்ளிவிவரங்கள் தவருக அமைந்தால், சர்க்காரும் தவருன முடிவுகளை மேற்கொள்ள வேண்டிவரும்."

சிவகாசியில் அர்த்தால்

பட்டாசு அனுப்பத் தடை: தளர்த்துமாறு கோரிக்கை

சிவகாசி, செப். 10—

சிவகாசியில் இன்று ஒரு மகத்தான அர்த்தால் நடைபெற்றிருக்கிறது.

இங்கிருந்து வெடிகள் ஏற்றுமதி செய்யக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருப்பதால், வேலை இழந்து தவிப்போருக்கு அனுதாபம் காட்டுவதற்காகவே இந்த அர்த்தால் நடைபெற்றிருக்கிறது.

இந்தப் பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து ஊர்வலமும், கூட்டமும் நடத்தி, தடையை நீக்குமாறு மத்திய சர்க்காரைத் தீர்மானம் மூலம் கேட்டிருக்கின்றனர்.

மாநில சர்க்கார், மத்திய சர்க்காரிடம் தடையை நீக்குமாறு கேட்க வேண்டுமெனக் கோரி, சிவகாசி உதவிகலெக்டரிடம் மனு ஒன்றும் தரப்பட்டிருக்கிறது.

போக்குவரத்துத் தொழிலாளர் கோரிக்கை

பரிசீலிக்கப்படுவதாக மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, செப். 10—

"வேலைநேரம், வேலை நிலைகள் இவை பற்றிய போக்குவரத்து தொழிலாளரின் கோரிக்கைகளை முக்கூட்டுக் கமிட்டி ஒன்று பரிசீலித்துக் கொண்டிருக்கிறது; கமிட்டியின் அறிக்கை கிடைத்ததும் அது பரிசீலிக்கப்படும்; கமிட்டியின் சிபாரிசுகளின் அடிப்படையில் நகல் மசோதா ஒன்றும் உருவாக்கப்படும்" என்று, மக்கள் சபையில், தொழிலாளர் இலாகா உதவி மந்திரி அபித்அலி தெரிவித்திருக்கிறார்.

அணுசக்தி இயக்கும்

240 நீளமுள்ள நீர்மூழ்கி

அமெரிக்கக் கடற்படையில் இதுவரையில் அணுசக்தியால் இயங்கும் மூன்று நீர்மூழ்கிகள் உள்ளன; நான்காவது நீர்மூழ்கி வேலை முடிந்து, புறப்பட்டுவிட்டது.

'ஸ்வோர்ட்பிஷ்' என்ற அந்த கப்பலின் நீளம் 240 அடியாகும்.

பிச்சைக்காரர் ஒழிப்புச் சட்டம்

செப். 15-ந் தேதி முதல் அமுலாகும்

சென்னை, செப். 10—

1945-ம் ஆண்டைய பிச்சைஎடுப்பதைத் தடுக்கும் சட்டத்தினை, இந்த ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ந் தேதி முதல் அமுல் செய்யப் போவதாக மாநில சர்க்கார் அறிவித்திருக்கின்றனர்.

சிதம்பரம், ஈரோடு, வேலூர், செங்கற்பட்டு, கும்பகோணம், திருச்சி, சீரங்கம், புதுக்கோட்டை ஆகிய பிச்சைக்காரர் விடுதி அமைக்கப்பட்டிருக்கும், 'முனிசிபல்' நகரங்களில் மட்டும் முதலில் இச்சட்டம் அமுல் செய்யப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

'மக்கள் கருத்தை அறிய வேண்டும்'

சென்னை சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

புதுடில்லி, செப். 11—

'படாஸ்கர் தீர்ப்பை உடனே அமுல் செய்யவேண்டும்; எல்லைப் பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்கள் தடைப்பட்டுள்ளது மக்களுக்கு நல்லதல்ல' என்றும், 'தென்னாட்டு மக்களின் விருப்பத்தை அறியாமல் இந்தியை ஆட்சி மொழியாக்கக்கூடாது' என்றும், 'மக்களின் விருப்பத்தை அறியாமல் முடிவு செய்வது கேடு பயக்கும்' என்றும் சென்னை மாநில சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் சீர்திருத்தக் கட்சியின் தலைவருமான திரு. வி. கே. இராமசாமி இங்கு தெரிவித்துள்ளார்.

'பல்கலைக் கழகங்கள் தனித்தே இயங்கும்'

டாக்டர் இலட்சுமணசாமி விளக்கம்

சென்னை, செப். 11—

சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக ஐந்து முறை தொடர்ந்து நற்பணி ஆற்றி, 6-வது முறையாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டதை ஒட்டி, டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்களுக்கு, சென்னைப் பல்கலைக் கழக ஆராய்ச்சி மன்றம் பாராட்டு விழா நடத்தியுள்ளது; விழாவிற்கு டாக்டர் செரியன் தலைமை வகித்தார்.

டாக்டர் ஏ. இலட்சுமணசாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"பல்கலைக் கழகத்தின் தனித்து இயங்கும் தன்மையை விட்டுக் கொடுத்து, அடிமைப்படுவதை நான் விரும்பவில்லை; இதனல் எனக்குப் பல சிக்கல்களும், தொல்லைகளும், மனவருத்த நிலையும் ஏற்பட்டுள்ளன. இருப்பினும், உலகத்தில் உள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களின் நடப்பைக் கருத்தில்கொண்டு பார்க்கும் போது சந்தேகத்திற்கே இடமின்றி, பல்கலைக் கழகங்களின் தனித் தன்மையை நாம் விட்டுக் கொடுக்காமல் காத்துவர வேண்டும்."

மேலும் அவர் பேசுகையில், இன்றைய சட்டமன்றங்களில் உருவாக்கப்படும் சட்டங்களில் குறைபாடுகள் மலிந்துள்ளன என்றும், அத்தகைய நிலையில் பல்கலைக் கழகங்கள் இயங்கவில்லை என்றும் தெரிவித்தார்.

தொழில் துறைத் தகராறுகள் அதிகரிப்பு

ஒரு புள்ளி விவரம்

புதுடில்லி, செப். 9—

1957 ஜூன் மாதத்தில் தொழில்துறை தகராறுகள் காரணமாக மொத்தம் 6,49,314 நபர்-நாட்கள் நஷ்டமாயின; முந்திய மாதத்தில் இது 4,34,879 நாட்களாக இருந்தது. அந்த மாதத்தில் எந்த ஒரு சமயத்திலும் இருந்த தகராறுகளின் எண்ணிக்கை மே மாதத்தில் 164 ஆக இருந்தது.

ஜூன் மாதத்தில், பதினைந்து தகராறுகள் கதவடைப்புகளில் முடிவடைந்தன; இவற்றில் 28,404 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்; மொத்தம் 2,40,154 நபர்-நாட்கள் நஷ்டமாயிற்று. மேற்கு வங்காளத்தில் ஏழு கதவடைப்புகளும், சென்னையில் மூன்றும், மைசூரில் இரண்டும், ஒரிசாவில் ஒன்றும் ஏற்பட்டன.

முடிவடைந்த தகராறுகள்

பரிசீலனை மாதத்தில் 92 தகராறுகள் முடிவுக்கு வந்தன. அதில் 39 தகராறுகளில் தொழிலாளர்களுக்குப் பூரண வெற்றியோ ஓரளவு வெற்றியோ ஏற்பட்டது. 26 வழக்குகளில் அவர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை. 15 தகராறுகளில் முடிவுகள் நிச்சயமாகத் தெரியவில்லை; 12 தகராறுகளின் முடிவுகளே தெரியவில்லை. புதிதாக ஏற்பட்ட 32 தகராறுகள் முக்கியமாய் கூலி, படி ஆகியவை காரணமாகவும், 26 தகராறுகள் சிப்பந்திகள் காரணமாகவும் ஏற்பட்டன.

பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் பலம்

பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை, வேறெப்போதும் இல்லாத அளவு சென்ற ஆண்டில் உயர்ந்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

1956-ம் ஆண்டில், கட்சி உறுப்பினர் எண்ணிக்கை 65,37,228 என்றும், இதில் 56 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் தொழிற்சங்க உறுப்பினர்கள் என்றும் கூறப்படுகிறது.

‘அகில உலகிற்கும் வழி காட்டும் இயல்பு திருக்குறளுக்கு உண்டு’

‘உயரிய கொள்கையை வலியுறுத்துகிறது ; இன்றைய வாழ்வுக்குப் பொருந்துகிறது’

திருக்குறள் விழாவில் பொதுச்செயலாளர்

கோவில்பட்டி, செப். 11—

“எல்லாக் கட்சிகளையும் மத, இனத்தவர்களையும் ஒன்றாக இணைக்கிற பெரிய கொள்கை நூல் திருக்குறள். ‘அன்பே கடவுள்’ என்கிற இலட்சியத்தையும், அகில உலகிற்கும் வழிகாட்டக்கூடிய இயல்பையும் பெற்றது திருக்குறள். பல்வேறு கருத்துக்களையும் கொண்ட மக்களை இணைப்பது திருக்குறள்தான் !”

—இவ்வாறு கோவில்பட்டியில் 25—8—57-ல் நான்காம் நாள் திருக்குறள் விழாவில் பேசிய பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் கூறினார்.

மேலும் அவர் பேசும்போது குறிப்பிட்டதாவது :—

“இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட குறள் இன்றைய வாழ்வுக்கும் பொருந்துகிறது. மக்களை வாழவைக்க வேண்டும் என்ற உயரிய கொள்கையை வலியுறுத்துவது குறள் ஒன்றுதான் ! குழந்தைகள் பெற்றோரிடம் எதிர்பார்ப்பது அன்புதான் ! திட்டு வாங்கிய குழந்தை உருப்படாது.

“நம்பிக்கை, நாணயம் நம் நாட்டில் இல்லை. ஜெர்மனி, அமெரிக்க நாட்டுச் சாமான்களை சொல்லும் விலை கொடுத்து வாங்குகிறோம் ; ஆனால், இந்தியச் சாமான்கள்மீது இந்த நம்பிக்கை வருவதில்லை.

“வெளிநாட்டுக்கு நம் வணிகர்கள் அனுப்பிய நிலக்கடலையில் கற்கள் கலந்திருந்ததால் மறுதடவை ஜாவா நாட்டில் அவர்கள் நிலக்கடலை வாங்கினார்கள்.

“நல்ல காரியத்திற்குப் பொய் பேசுவதில் தவறில்லை என்றவர் வள்ளுவர்.

“பயங்கரக் கொலைகள் நாட்டில் நடக்கின்றன. இரண்டு நிமிடம் சிந்திக்கச் சந்தர்ப்பம் இருந்தால் இந்தக் கொலைகளைத் தவிர்க்கலாம்.”

புதிய நாணயங்கள் !

புதுடில்லி, செப். 9—

1957 எப்ரல் முதல் ஜூலை வரையில் புழக்கத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ள எல்லாவித தசாம்ச நாணயங்களின் மொத்த மதிப்பு சுமார் ரூ. 1,60,00,000 என்று மத்திய நிதி அமைச்சர் டி. டி. கே. மக்கள் சபையில் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

குடியிருப்பு வசதித் திட்டத்திற்குக் கடன்

மாநிலவாரியாக விவரம்

புதுடில்லி, செப். 9—

குறைந்த வருமானத் தொகுதியைச் சேர்ந்தவர்களுக்கு, இலாபமும் இல்லை—நஷ்டமும் இல்லை என்னும் அடிப்படையில், விற்பனை செய்யப்படுவதற்காக மனையிடங்களை வாங்கி அபிவிருத்தி செய்வதற்கு, இந்திய சர்க்கார் 1957 ஆகஸ்ட் 31-ந்தேதிவரை பல்வேறு மாநில சர்க்கார்களுக்கும் அனுமதித்துள்ள கடன் தொகைகள் பற்றிய பின்வரும் விவரங்கள் மாநிலங்கள் சபையில் தரப்பட்டிருக்கின்றன :—

ஆந்திரம்	ரூ. 5.55	இலட்சம்
பீகார்	16 00	,,
பம்பாய்	22 65	,,
ஜம்மு காஷ்மீர்	5·00	,,
மத்தியப் பிரதேசம்	23·25	,,
சென்னை	4·24	,,
பஞ்சாப்	5 00	,,
இராஜஸ்தான்	8·50	,,
உத்தரப் பிரதேசம்	47·00	,,
டில்லி	25·00	,,

கிருஷ்ணமாச்சாரி கடனுக்காகக் கையேந்தமாட்டாராம்

‘கோரிக்கைவந்தால் கவனிப்போம்’ என்கிறார் டல்லஸ்

வாஷிங்டன், செப். 10—

“தனது இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, இந்தியா ஏதேனும் கடனுதவி கோரினால், அமெரிக்கா அக்கோரிக்கையை அனுதாபத்துடன் பரிசீலிக்கும்” என்று, அமெரிக்க வெளிவிவகார மந்திரி டல்லஸ் தெரிவித்திருக்கிறாராம்!

அமெரிக்காவிடமிருந்து 50 முதல் 60 கோடி டாலர் வரை கடன்பெற பண்டித நேரு முயற்சிப்பதாக வெளிவந்த செய்திகள் பற்றி கருத்தறிவித்த அவர், ‘இந்தியாவிடமிருந்து இன்னும் அதுபோன்ற கோரிக்கை எதுவும் வரவில்லை’ என்றும் கூறியிருக்கிறார்.

கையேந்தமாட்டாராம் !

புதுடில்லி, செப். 10—

‘இந்தத் திங்கள் 17-ந் தேதி புறப்பட்டு அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, நாடுகளில் சுற்றுப் பயணம் செய்யவிருக்கும் நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், அந்த நாடுகளில் எல்லாம் இந்தியாவுக்கு நீண்டகாலத் தவணையில் கடன் வேண்டுமெனக் கையேந்திப்பெற முயற்சிப்பார் என்று, வெளிவருகிற செய்திகள் ஆதாரமற்றவை’ என, டில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் இறக்குமதிக் கொள்கை

தளர்த்த இயலாதெனக் கண்டிப்பு

புதுடில்லி, செப். 10—

இறக்குமதி ஆய்வுக் குழுவின் கூட்டம் டில்லியில் நடைபெற்றுள்ளது; சென்ற முறை இக்கூட்டம் நடைபெற்றபோது இந்திய அரசாங்கத்திற்கு ரூ. 469 கோடி அந்நிய செலாவணி வசதி இருந்ததாம் ; இப்போது ரூ. 380 கோடி மட்டுமே அந்நிய செலாவணி வசதி உள்ளதாம் ; இடையில் ரூ. 89 கோடி அந்நிய செலாவணி வசதியை இந்தியா பெற்றுள்ளதாம்.

இந்தியாவில் உற்பத்தியாகும் பொருள்களை வைத்து நிலைமையைச் சமாளிக்க வேண்டும் என்று இறக்குமதியாளருக்கு யோசனை கூறியுள்ளார், மத்திய அமைச்சர் தேசாய்.

இப்போது உள்ள இறக்குமதிக் கொள்கையை மாற்றவோ, தளர்த்தவோ இயலாதெனக் கண்டிப்பாகக் கூறியுள்ளார்.

முன்பு இறக்குமதி ஆய்வுக் குழு கூடியபோது ரூ. 469 கோடி ஸ்டர்லிங் நிலுவை இருந்துள்ளது; இப்போது ரூ. 89 கோடி குறைந்து ரூ. 380 கோடி மட்டுமே ஸ்டர்லிங் நிலுவை உள்ளது. இதைக் குழுவிற்குச் சுட்டிக்காட்டி, இந்தியப் பேரரசுக்கு உள்ள அவல நிலையை விளக்கியுள்ளார்.

இப்போது அந்நியச் செலாவணியில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை முன்னிட்டு இன்னும் 6 மாத காலத்திற்கு — 1958 மார்ச் திங்கள்வரை, இந்திய அரசாங்கத்தின் இறக்குமதிக் கொள்கையைத் தளர்த்த இயலாதெனக் கண்டிப்பாகத் தெரிவித்துள்ளார்.

கேட்டீரா, சேதி !

இலக்குமணபுரி, செப். 10—

உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஒரு நவீன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு நகரங்களுக்கிடையே பிரயாணிகளை ஏற்றிச் செல்ல ‘விமான டாக்சி’ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாம்.

வெளியேற்றப்பட்டவர்களுக்கு வேலை தேடித் தந்தனராம்

புதுடில்லி, செப். 9—

பாதுகாப்பு, நிறுவனங்கள், நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்கள் ஆகியவைகளிலிருந்து ஆட்குறைப்பு காரணமாகவும் அதிகச் சிப்பந்திகள் இருந்ததன் காரணமாகவும் வெளியே அனுப்பப்பட்டவர்களில் மொத்தம் 6,851 பேர், 1957 எப்ரலிலிருந்து வேலையளிப்பு நிலையங்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொண்டுள்ளனர் என்றும், இவர்களில் மொத்தம் 5,112 பேருக்கு இதுவரையில் மாற்று வேலைகள் தேடிக்கொடுக்கப்பட்டுள்ளன என்றும், தொழிலாளர் நலத் துணை மந்திரி அபித் அலி மாநிலங்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

இந்திக்கு மாணவர்கள் எதிர்ப்பு

புதுக்கோட்டை கல்லூரி மாணவர்கள் ஊர்வலம்

புதுக்கோட்டை, செப். 11—

மத்திய அரசாங்க இந்தித் திணிப்புக் குழுவின் சிபாரிசுகளை எதிர்க்குமுகத்தான், நேற்று (10—9—57) புதுக்கோட்டை அரசினர் கல்லூரி மாணவர்கள் கல்லூரிக்குச் செல்லவில்லை. அவர்கள் அனைவரும், ‘இந்தித் திணிப்பு ஒழிக’ என்ற முழக்கத்துடன் ஊர்வலமாக நகரின் முக்கிய வீதிகளின் வழியே சென்று காந்தி சவுக்கத்தையடைந்தனர்.

அங்கு அடியிற்கண்ட தீர்மானங்கள் மாணவர்களால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன :—

1. மாணவர்கள்மீதும், பொதுவாக நம்நாட்டவர்மீதும் கட்டாயமாக இந்தியைப் புகுத்துவதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன், அரசாங்க மொழிக் குழுவின் சிபாரிசுகளை ஏற்றுக்கொள்ள வேண்டாமென்று இந்திய அரசினரைக் கேட்டுக்கொள்கிறது.

2. சென்னை ராஜ்யம் என்பதை மாற்றி ‘தமிழ்நாடு’ எனப் பெயரிடும்படியும், நம் தாய்மொழியாம் தமிழ் மொழியை ஆட்சி மொழியாகவும், பாட மொழியாகவும் உடனடியாக அமுலாக்கும்படியும் கேட்டுக்கொள்கிறது.

விலை தந்து வாங்கிய பாம்புகளின் நஞ்சு!

புள்ளி விவரம் பற்றித் தகவல்

புதுடில்லி, செப். 9—

“நஞ்சு முறிப்பு சீரம் மருந்து தயாரிப்பதற்காகவும், ஆராய்ச்சி காரியங்களுக்காகவும் கசௌலி மத்திய ஆராய்ச்சி நிலைய டைரக்டர் பம்பாய் ஹாப்கின் நிலைய டைரக்டரிடமிருந்து பாம்புகளின் நஞ்சை வாங்கியிருக்கிறார். நஞ்சு முறிப்பு மருந்து தயாரிப்புக்காக
1953—54-ல் 40·01 கிராம்;
1954—55-ல் 42·2123 கிராம்;
1955—56-ல் 41·9530 கிராம்;
1956—57-ல் 15·6735 கிராம்;
நல்லபாம்புகளின் நஞ்சு வாங்கப்பட்டது” என்று, மாநிலங்கள் சபையில் சுகாதார அமைச்சர் டி. பி. கர்மார்க்கர் தெரிவித்துள்ளார்.

சூயஸ் போர் விளைவு

இந்தியாவுக்கு ரூ. 1 கோடி நஷ்டம் ஏற்பட்டதாம்!

‘சூயஸ் போரின் காரணமாக உணவுத் தானியங்களும் மற்றச் சாமான்களும் கேப் முனையைச் சுற்றி கப்பல்களிலும், விமானங்களிலும் வரவேண்டியிருந்ததால் இந்தியாவுக்கு ரூ. 91,40,000 அதிகச் செலவு ஏற்பட்டது’ என்று மக்கள் சபையில் பண்டித நேரு அறிவித்துள்ளார்.

புற்று நோய் ஒழிப்பில் புது ‘சகாப்தம்’

சென்னையில் ‘கோபால்டு கதிரியக்க’ நிறுவனம்

சென்னை, செப். 9—

அணு சக்தியின் மிக முக்கியமான உபயோகங்களில் ஒன்று, அதை மருத்துவத்துக்குப் பயன்படுத்துவதாகும். ஆசியாவிலேயே முதன்முதலாக அணு சக்தியை மருத்துவத்துக்குப் பயன்படுத்தும் நடவடிக்கையாக, 5—9—57-ல் சென்னை — அடையாறிலுள்ள புற்றுநோய் சிகிச்சை நிறுவனத்தில் கோபால்டு-60 கதிர் சாதனம் நிறுவப்பட்டது.

குறிப்பிட்டவகை பிணியைத் தீர்ப்பதில் ‘கோபால்டு’ போன்றதான இது, ரேடியக் கதிரியக்கம் போல 200 மடங்கு சக்தி வாய்ந்தது; சாதாரண ‘எக்ஸ்ரே’போல பல நூறுமடங்கு சக்திவாய்ந்தது. ரூ. 4 இலட்சம் செலவில் உருவான ‘எல்டரேடோ கோபால்டு’ சிகிச்சைக் கருவி நிறுவப்படுவது ஆசியாவிலேயே முதலாவதாகும். இந்தச் செலவின் ஒருபகுதியை கனடா அணுசக்திக் குழு ஏற்றுக்கொண்டது ; மிகுதியை மத்தியஅரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

புற்று நோய் ஒழிப்பில் இதன் மூலம் புதிய அணுசக்தி ‘சகாப்தம்’ ஏற்படுகிறது. புற்று நோய் ஒழிப்புக்கு மருத்துவர்களின் கையில் புதிய சக்திவாய்ந்த ஒரு கருவி இதன்மூலம் கிடைக்கிறது.

மேற்கத்திய நாடுகளில் இந்தப் புதிய சிகிச்சை முறை, ஆழ ஊறிப் போய்விட்ட புற்றுக்களைக் கூட, நோயாளியின் பொது உடல் நலத்துக்கு எவ்வித குந்தகமும் இல்லாமல் குணப்படுத்தியிருக்கிறது.

இந்த மிக சக்திவாய்ந்த ‘ரேடிய ஆக்டிவ்’ இயந்திரக் கருவியை வைத்திருப்பதற்கான கட்டிடம் ரூ. 35,000 செலவிலான 18 அங்குல கான்கிரீட் சுவர் கொண்டதாக இருக்கும். அங்கு பணியாற்றுபவர்களுக்கு முழு அளவில் பாதுகாப்பு அமைப்புகள் இருக்கும்.

மதுக்கூர் மகப்பேறு இல்லத்தில் பரிசளிப்பு

அதிராம்பட்டினம், செப். 8—

மதுக்கூரில், 13—8—57-ல், அமைச்சர் கக்கன் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட மகப்பேறு இல்லத்தில் முதலாவதாகப் பிறந்த குழந்தைக்குப் பரிசளிக்கும் விழா ஒன்று, அம்மகப்பேறு இல்லத்தில், 23—8—57-ல் நடைபெற்றது ; திரு. ப. அருணாசலம் அவர்கள் தலைமை தாங்கினார். திரு. மு. கா. அப்துல்ரகிமான் அவர்களால் தங்கச்சங்கிலி ஒன்று குழந்தைக்குப் பரிசாக வழங்கப்பட்டது. இரண்டாவது பிறந்த குழந்தைக்கு ரொக்கத் தொகை, திரு. தி. மாணிக்கம் அவர்களால் வழங்கப்பட்டது.

நகர தி. மு. க. செயலாளர் டாக்டர் அப்துல்கரீம், திரு. ஏ. ஆர். மாரிமுத்து எம். எல். ஏ., திரு. ஆனந்தன், தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ முதலியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் பேசுகையில், நூறாவது பிறக்கும் குழந்தைக்கு ஒரு வெள்ளிக் கோப்பையைத் தான் பரிசாக வழங்குவதாகவும்; தன் நண்பர்களால் மேலும் பல பரிசுகளை வழங்க அன்று ஏற்பாடு செய்வதாகவும் வாக்களித்தபின், வழாக் கமிட்டியினர் நன்றிகூற இனிது முடிவுற்றது. (ந. கி.)

தஞ்சை மக்கள்சபைத் தொகுதி தேர்தல்

ஐவர் போட்டியிடுகின்றனர்

தஞ்சை, செப். 11—

நடைபெற்ற பொதுத் தேர்தலில், மக்கள்சபைக்கு தஞ்சைத் தொகுதியிலிருந்து திரு. ஆர். வெங்கட்ராமன் தேர்ந்தெடுக்கப்பட்டார் ; அவர் சென்னை மாநில அமைச்சரவையில் தொழில் அமைச்சராகிவிட்ட காரணத்தினால், மக்கள்சபை உறுப்பினர் பதவியைவிட்டு விலகிக்கொண்டார்.

மீண்டும் தஞ்சை மக்கள்சபைத் தொகுதியில் இடைத் தேர்தல் நடைபெறுகிறது.

மொத்தம் 5 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர். அவர்கள் தங்கள் மனுக்களை நேற்று தாக்கல் செய்துள்ளனர். அவர்களின் பெயர்கள் வருமாறு :—

1. டி. எஸ். இராமச்சந்திரன் (பழைய ஐ.சி.எஸ். அதிகாரி)
2. எஸ். சுயம்பிரகாசம்
3. மணலி கந்தசாமி
4. பி.எ. இருதயசாமிநாடார்
5. வைரவன் சேர்வை (காங்.)

கேரளத்தில் நில உடமைக்கு வரம்பு

15 முதல் 30 ஏகர் நிலம் மட்டுமே வைத்திருக்கலாம்

புதுடில்லி, செப். 10—

15 முதல் 30 ஏகர் வ[illegible]யில் மட்டுமே கேரளத்தில் வி[illegible]யிகள் நிலம் வைத்திருக்க[illegible]ம் என்று நில உடைமைக்கு வர[illegible] கட்டும் சட்டத்தில் நிர்ணய[illegible] செய்யப்பட்டிருப்பதாக சட்ட மந்திரி வி. ஆர். கிருஷ்ண ஐயர் இங்கு தகவலளித்திருக்கிறார்.

இந்த வரம்புகூட மிக அதிகமானது என்றும் ஒருவருக்கு 15 ஏகர் தேவையில்லை என்றும் ஒருவருக்கு ஒரு ஏகர் நிலமே போதுமானது என்றும் ஆச்சாரியா வினோபா பாவே தம்மிடம் கூறியதாகவும் அந்த மந்திரி கூறியுள்ளார்.

தென்னந் தோப்புகள், மி[illegible]குப் பயிர் விளைநிலங்கள் இ[illegible]ம் இந்த நிலச் சீர்திருத்தச் ச[illegible]த்தின் அடங்கும் என்[illegible] [illegible]பி, தேயிலை போன்ற பெ[illegible] தோட்டங்கள் சட்டத்தா[illegible] பாதிக்கப்படாது என்றும் என[illegible] மத்திய சர்க்கார், நாங்கள் இ[illegible] சீர்திருத்[illegible] [illegible]நில் குறை[illegible]தா[illegible]கவும் தெரிவித்திருக்கிறார்.

'இன்னல்கள் சூழ்ந்த நேரத்திலும் பெருந்தன்மையை விட்டுக்கொடுக்காத இயல்பினர்'

'கண்டித்தவர்களிடமிருந்தும் பாராட்டைப் பெற்ற பெருந்தகையாளர்'

கலைவாணரின் சிறப்பியல்புகள் குறித்து துணைப்பொதுச்செயலாளர் என். வி. நடராசன்

கடந்த 6—9—57-ல் சென்னை-திருவல்லிக்கேணி கடற்கரையில் நடந்த கலைவாணர் என். எஸ். கே. இரங்கற் கூட்டத்தில், தி. மு. க. துணைப்பொதுச்செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் ஆற்றிய இரங்கலுரையின் சுருக்கம் அடியில் தரப்பட்டுள்ளது :—

"கலைவாணர் அவர்களுடன் கடந்த 10—12 ஆண்டுகளாக நெருங்கிப் பழகியிருக்கிறேன்; நெருங்கிய உறவினன்போல இருந்திருக்கிறேன்; அவருடைய நற்பண்புகளை நான் நன்கு அறிவேன். இன்று அவர் நம்மிடையே இல்லை. ஒரு நாட்டின் தலைவனே இறந்ததுபோல கலைவாணர் மறைவுச் செய்தி நாட்டு மக்களிடையே பெருந் துக்கத்தைத் தந்தது. தமிழ்நாடு இதுவரை வேறு எவருடைய மறைவுக்காகவும் இப்படி அழுததில்லை.

"கலைவாணர் என். எஸ். கே. பொதுவாழ்க்கையில் தன்னையே அர்ப்பணித்துக்கொண்டார்.

"நம் கலைவாணர் அவர்கள் ரஷ்யாவுக்குச் சென்று திரும்பிய நேரத்தில், அவரை இப்பொழுது அமைச்சராக உள்ள ஒருவர் 'கோமாளி' என்று கிண்டல் செய்தார்; 'இந்தக் கோமாளியின் பேச்சைக் கேட்காதீர்கள்; கோமாளிக்குக் கூத்தாடத் தெரியுமே தவிர, அரசியலில் என்ன தெரியும்?' என்றெல்லாம் அவர் பல மேடைகளிலே பேசினார்.

"அதையறிந்த நம் கலைவாணர் இதே கடற்கரையில் நடந்த ஒரு மாபெரும் கூட்டத்தில் பேசுகையில் சரியான சூடு கொடுத்தார்; அவர் அன்று சொன்ன பதில் இன்றும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது - 'கிருஷ்ணன் வெறும் கோமாளியல்ல; அவர்கள்தான் (காங்கிரசார்) பத்தாம் பசலி கோமாளிகள்; அவர்களுடைய நடவடிக்கைகள்தான் நாட்டு மக்களைச் சிரிக்கவைக்கின்றன; அவர்கள்தான் நாட்டின் ஆட்சிபீடத்தில் அமர்ந்துகொண்டு கோமாளிக் கூத்தடிக்கின்றனர்' —என்று, உணர்ச்சி ததும்ப, உள்ளம் கொதிக்கப் பதில் சொன்னார்.

"அன்று தன்னைக் கோமாளி என்று சொன்ன அதே அமைச்சர் உட்பட பலர், இன்று தன்னுடைய கலைத்துறைப் பணிகளை உணர்ந்து, உரிய மரியாதை செய்ததைக் கண்டுவிட்டுத்தான் செத்தார் கலைவாணர்.

"ஒரு கூட்டத்திலே காரசாரமாகப் பேசினால், கசப்பான விஷயத்தைச் சொன்னால், கல் வந்து விழுவதுண்டு; ஆனால் நம் கலைவாணர் அவர்கள் எப்படிப்பட்ட விஷயத்தையும், எல்லோரையும் சிரிக்கவைத்து அதன் மூலம் சொல்லிவிடுவார்; அவரை எவரும் எதிர்க்கமாட்டார்கள். அவர் ஒரு கலைஞர் மட்டுமல்ல; தீர்க்கதரிசி என்று சொல்லக் கூடிய அளவுக்கு, எதையும் சிந்தித்துச் செயலாற்றினார். நாம் மேடைகளிலே சொல்லத் தயங்கும் விஷயங்களையெல்லாம் அவர் துணிச்சலாக சினிமாவிலேயே புகுத்தியிருக்கிறார்.

"ஒரு சினிமாப் படத்தில் அவர், 'அன்னசத்திரம் இருப்பது எதனாலே?' என்ற கேள்வியை[illegible] கேட்டு, 'திண்ணைத் தூங்[illegible] பசங்கள் இருப்பதாலே' எ[illegible] பதில் சொல்லுகிறார். 'ப[illegible]சி இருப்பது எதனாலே?' என்[illegible]தற்கு 'வீட்டுச் சோறு இருப்ப[illegible]னாலே' என்று பதிலளிக்கிறார். 'உலகத்தில் பயங்கர ஆயுதம் இருப்பது எதனாலே?' என்பதற்கு, 'கிலே[illegible] யஞ்சனேயாளர் [illegible] என்கிறார். இப்படிப்பட்ட கருத்துக்களை நாம் மேடையில் சொல்ல முடியுமா?

"கலைவாணர் அவர்கள் நம் கழகத்தின்பால் நீங்காப் பற்றுக் கொண்டிருந்தார்; நம்முடன் இரண்டறக்கலந்து பல பணிகள் புரிந்தார்; குறிப்பாக அண்ணா அவர்களிடம் அலாதியான அன்பும், மதிப்பும் வைத்திருந்தார் என்றாலும், மற்றக் கட்சிக்காரர்களைக் கண்டால் காயமாட்டார். அபிப்பிராய பேதத்திற்கு இடமளித்து வந்தார்; எனினும், கொள்கையுறுதி கொண்டவர்; 'தானுண்டு, தன் தொழிலுண்டு' என்று அவர் என்றும் இருந்ததில்லை; பொதுப் பணியே அவரது குறிக்கோளாக இருந்தது.

"1944-ம் ஆண்டில் சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் அண்ணா அவர்கள் முயற்சியால் 'சந்திரோதயம்' என்ற நாடகம் முதன் முதலாக அரங்கேற்றப்பட்டது; அப்பொழுது அந்தத் தியேட்டரில் என். எஸ். கே. அவர்களின் நாடகங்கள் நடைபெற்று வந்தன; எனினும் 'சந்திரோதயம்' நாடகம் நடிப்பதற்காக, ஒருநாள் இலவசமாக தியேட்டரை அளித்து, மற்றும் நாடகத்துக்கு வேண்டிய சீன்கள், எடுபிடி ஆட்கள் எல்லாம் தந்து உதவினார் கலைவாணர்.

"'சந்திரோதயம்' நாடகத்தை வந்து காணுமாறு, நம் கலைவாணர் அவர்கட்கும், எம். கே. தியாகராஜ பாகவதர் அவர்கட்கும், இசையரசு எம்.எம். தண்டபாணி தேசிகர் அவர்கட்கும் தனி அழைப்பு அனுப்பியிருந்தார் அண்ணா; அழைப்பை ஏற்று அவர்கள் மூவரும் வந்திருந்தார்கள். நாடகத்துக்குப் பெரியார் தலைமை வகித்திருந்தார். பெரியார் தன் தலைமையுரையில், கலைவாணர், பாகவதர், இசையரசு மூவரும் மனம்புண்படும்படி பேசிவிட்டார். பெரியார் அப்படிப் பேசுவதையறிந்த அண்ணா அவர்கள், (வேடமணிந்திருந்ததால்) சீனுக்கு உள்ளே இருந்துகொண்டே 'நிதானமாகப் பேசுங்கள், ஐயா' என்று கேட்டுக்கொண்டார்; அதைக் காதில் வாங்காமல் பெரியார் ஆவேசமாகப் பேசிவிட்டார்.

"பெரியார் பேசிக் கொண்டிருந்தநேரத்தில் நான் அந்த மூவர் முகங்களையும் கவனித்தேன்; பாகவதர் முகமும், தேசிகர் முகமும் கோபத்துடன் காட்சியளித்தன; ஆனால் நம் கலைவாணரோ, அப்பொழுதுதான் வெற்றிலை பாக்கைப் போட்டுக்கொண்டு சிரித்தபடி இருந்தார்.

"பின்னர், அந்த மூவரையும் மேடைக்கு அழைத்துவந்து மாலை போட்டு மரியாதை செய்யும் பொருட்டு நான்போய் அவர்களை அழைத்தேன்; பாகவதரும், தேசிகரும் வரமறுத்துவிட்டனர். 'போங்களய்யா உங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு; எங்களை இப்படித் திட்டுவதற்குத்தான் இங்கு அழைத்துவந்தீர்களோ?' என்று கூறி, வரமறுத்துவிட்டனர்.

"நம் கலைவாணரை அழைத்தேன்; அவர் மட்டும் மலர்ந்த முகத்துடன், வர ஒப்புக்கொண்டதுடன், மற்ற இருவரையும் தன்னுடன் மேடைக்கு அழைத்து வந்துவிட்டார்.

"பெரியார் பேசியதற்காக வருத்தந்தெரிவிக்கும் முறையில் அண்ணா அவர்கள் பேசினார்கள்; உடனே, நம் கலைவாணர் எழுந்து 'அண்ணா சொல்வது தவறு; அதை ஒப்புக்கொள்ளமாட்டேன்; ஐயா சொன்னதுதான் சரி' என்றுகூறி பேச ஆரம்பித்துவிட்டார்.

"அவர் மேலும் பேசுகையில், 'நடிப்புத் துறையில் சீர்திருத்தம் வேண்டும் என்று ஐயா இப்பொழுது காலங்கடந்து சொல்கிறார். நான் நடித்த படங்களையெல்லாம் ஐயா பார்த்தால் அவற்றில் நான் எப்படி நடித்திருக்கிறேன் என்பது புரியும்' என்று பேசினார்; 'கலைத்துறையில் பழைய புராணங்களைக் கட்டியழும் போக்கை பெரியார் கண்டித்தது சரிதான்' என்று அவர் கூறினார். 'நான் இத்தனைப் படங்களில் இன்னின்னவகையில் நடித்திருக்கிறேன்; இன்னின்ன காரியங்களுக்காக இவ்வளவு நன்கொடையளித்திருக்கிறேன்' என்றெல்லாம் கலைவாணர் சொன்னதும், பெரியாரே தான் பேசியது தவறு என்பதையுணர்ந்து, தன் பேச்சுக்காக வெட்கப்பட்டு தலை குனிந்து இருக்கும்படி நேர்ந்துவிட்டது.

"பின்னர் பெரியார் எழுந்து, தன் பேச்சுக்கு மன்னிப்புக் கேட்டார்; 'என்னை அடிக்காமல் அடித்துவிட்டார், கிருஷ்ணன்' என்று பெரியார் குறிப்பிட்டார்.

"அன்று நடந்த அந்த 'சந்திரோதயம்' நாடகம், சென்னை மாவட்ட சுயமரியாதை சங்க நிதிக்காக நடிக்கப்பட்டது. அதன் மூலம் ரூ. 1,100 வசூலாயிற்று. நம் கலைவாணர் அவர்கள், தன் கையிலிருந்து 900 ரூபாயைக் கொடுத்து, சுயமரியாதை சங்க நிதிக்கு ரூ. 2,000 ஆகக் கொடுக்கச் செய்தார்.

"இதிலிருந்து, நம் கலைவாணரின் பெருந்தன்மையையும் நன்கு அறியலாம்.

"முன்பு கலைவாணர் அவர்கள் சிறையிலிருந்தபோது, வழக்கு நடத்துவதற்காகப் பணம் இல்லாது சிரமப்படுகிறார் என்பதையறிந்து, பெரியாரவர்களிடமிருந்து பணம் வாங்கிக் கொடுத்து உதவுவதற்கு அண்ணா அவர்கள் ஏற்பாடு செய்தார்கள். பெரியாரவர்களும் பணம் கொடுக்கச் சம்மதித்து ரூ. 25,000 மடியில் எடுத்து வைத்துக் கொண்டு சிறையிலிருந்த என். எஸ். கே. அவர்களைக் காணச் சென்றார்கள். பெரியாருடன் நானும், அண்ணாவும் சென்றோம். அப்பொழுது பெரியாரவர்கள், கலைவாணரை நோக்கி, 'கவலைப்படாதீர்கள்; உங்கள் வழக்கு வெற்றி பெறும்; இதோ, உங்களுக்காக நான் பணம் கொண்டுவந்திருக்கிறேன்; மதுரம் அம்மையாரிடம் பணத்தைக் கொடுத்துவிட்டுச் செல்கிறேன்' என்றார்.

"உடனே கலைவாணர், புன்முறுவலுடன், 'எனக்குப் பணம் வேண்டாம் ஐயா; நான் எப்படியும் சமாளித்துக்கொள்கிறேன். எனக்காக நீங்கள் இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டதற்காக என் நன்றி; நிச்சயம் நான் விடுதலையடைந்துவிடுவேன்' என்று கூறினார். பெரியார் எவ்வளவு சொல்லியும் பணத்தைப பெற்றுக்கொள்ளவில்லை, கலைவாணர்.

"அப்பொழுது கலைவாணருக்குப் பணமுடை எவ்வளவு இருந்தது என்பது எங்களுக்குத் தெரியும். அப்படியிருந்தும், அவர் அப்பணத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை என்பதையறிந்த நாங்கள் மிகவும் வியப்படைந்தோம்; அவரது பெருந்தன்மையைப் பாராட்டினோம்.

"இப்படி அவர், தனக்கு ஏற்படும் எவ்வளவு பெருந்துன்பங்களானாலும் அவற்றைப் புன்முறுவலுடன் ஏற்று, சிறிதும் கவலைப்படாமல் காரியமாற்றிவந்தார். பெரிய சிக்கனவாதியான பெரியாரே மனமுவந்து ரூ. 25 ஆயிரம் கொடுக்க முன்வருகிற அளவுக்கு கலைவாணர் அவர்கள் பெரியாரின் மனதைக் கவர்ந்திருக்கிறார் என்றால் அது மிகையாகாது.

"அவர், பெரியாரிடமும் அண்ணா அவர்களிடமும், நம் இயக்கத்துடனும் தனி மதிப்பு வைத்திருந்தார். நம் கொள்கையைப் பரப்ப அவர் அரும்பாடுபட்டிருக்கிறார். இன்று அவரை இழந்து தவிக்கிறோம். நமக்கு நாமே ஆறுதல் கூறிக்கொண்டு, அவர் வழி நடப்போமாக!"

நீதித் துறையில் அரசியல் ஆதிக்கம்

மதுரை, செப். 11—

"அரசாங்கத்தின் நிர்வாகப் பகுதியைச் சேர்ந்தவர்கள் நீதித் துறையில் தங்கள் செல்வாக்கை பயன்படுத்துவது கூடாது" என்று, ஓய்வுபெற்ற சுப்ரீம் நீதிமன்ற நீதிபதி தெரிவித்துள்ளார்.

இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த சமீபத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு அவர் வருத்தம் தெரிவித்து, பாராளுமன்றம் தங்கள் கைக்குள் இருக்கிறது என்ற தைரியத்தினால் நாட்டில் பெரிய நீதிமன்றங்கள் செய்த தீர்ப்புகளைக்கூட மாற்ற நினைக்கும் மனப்பான்மையைக் கண்டித்தார்.

"சட்ட மன்றம் தங்கள் வசம் இருப்பதால் எத்தகைய சட்டத்தையும் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற நிலை ஆபத்தைக் கொண்டுவரும்" என்று அவர் எச்சரித்துள்ளார்.

இந்திப் படத்தைத் தமிழாக்க ரூ.7000 தரப்படுகிறது!

சென்னை சர்க்கார் முடிவு

குழந்தைகளுக்கெனத் தனித் திரைப்படங்கள் தயாரிப்பதற்கும், நல்ல கருத்துக்கள் நிரம்பிய கதைகளைத் தேர்ந்தெடுத்து யோசனை கூறவும், சென்னை கல்வி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் ஆலோசனைகளை குழந்தைகள் திரைப்படச் சங்கம் அமுல் நடத்துமாம்.

உடனடியாக, இந்தியில் வெளியிடப்பட்டுள்ள குழந்தைகள் படமான 'ஜல்தீப்' என்ற படத்தைத் தமிழாக்கி வெளியிடுவதற்கு சென்னை அரசாங்கம் ரூ. 7,000 ஒதுக்கியுள்ளதாம்.

கழகக் கூட்டங்கள்

★

சுப்பிரமணியபுரம் :
14—9—57 மாலை 6½ மணிக்கு
தலைவர் : ஆ. துரையரசன்
பேசுவோர் :
அண்ணா
என். எஸ். இளங்கோ

★

காரியாங்குடி :
(திருவாரூர் சமீபம்)
14—9—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : சண்முகம்
பேசுவோர் :
என். வி. நடராசன்
எஸ். வி. கல்யாணசுந்தரம்

★

அக்காரநாட்டாமங்கலம்:
13—9—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : மொட்டையன்
பேசுவோர் :
சிற்றுளி-சுப்பிரமணியம்
வி. சிவப்பிரகாசம்
ஈ. ஆர். கிருஷ்ணன்

★

திருவொற்றியூர் :
சன்னதித் தெருவில்
14—9—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : இரா. தீனதயாளன்
பேசுவோர் :
கி. மனோகரன்
கண்ணதாசன்
ஆர். ஜார்ஜ்
இன்னிசை : சேலம் சீனிவாசன்

'திராவிடன்'

வாசகர்களுக்கு அறிவிப்பு

அச்சு இயந்திரத்தில் ஏற்பட்டிருக்கும் பழுதின் காரணமாக இவ்வாரம் 'திராவிடன்' இதழ் 15-9-57 அன்று வெளிவரும்.

—நிர்வாகி : 'திராவிடன்'

சென்னை—இராயபுரம் நெடுஞ்செழியன் பகுத்தறிவு மன்றப் பொதுக் கூட்டம்

13—9—57 மாலை 6½ மணிக்கு இராயபுரம்—நகரத்தார் கோவில் தெருவில், நெடுஞ்செழியன் பகுத்தறிவு மன்றச் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் அன்புரோ[illegible] தலைமை வகிப்பார். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், காஞ்சி கல்யாணசுந்தரம், என். சீவரத்தினம், வி. முனுசாமி, வி. டி. அர[illegible] ஆகியோர் பேசுவர். டேப் இராதாமாணிக்கம் இன்னிசையுண்டு.

துறையூர் கே. வி. கே. சாமி நினைவு மன்றப் பொதுக்கூட்டம்

14—9—57 இரவு 7 மணிக்கு, துறையூர் பிள்ளையார் கோவில் மைதானத்தில் தோழர் து. வி. பெருமாள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. [illegible] சிற்றரசு, எஸ் நெடுமாறன், மு. பெ[illegible] முத்துக்கருப்பன் ஆகியோர் பேசுவர்.

வில்லிவாக்கம் தி. மு. க பொது உறுப்பினர்கட்[illegible]

14—9—57 மாலை 5 மணியள[illegible]வில், வில்லிவாக்கம் தி. மு. கழகக்கிளையின் தேர்தல் நடைபெறும். தோழர் சு. பாலன் தேர்தல் ஆணையாளராக இருந்து தேர்தலை நடத்திவைப்பார். வில்லிவாக்கம் தி. மு. கழகப் பொது உறு[illegible]பினர்கள் தவறாது வருமா[illegible] அழைக்கப்படுகிறார்கள்.

சின்னமனூர் தி. மா. மு. கழகப் பொதுக்கூட்டம்

14-9-57 மாலை மேற்படி கூட்டம் சின்னமனூரில் நடைபெறும். தோழர்கள் எம். எஸ். இராமசாமி, கே. ஏ. கலைமழகன் ஆகியோர் பேசுவர்.

உடுமலை பகுத்தறிவு மன்றக் கட்டிடத் திறப்பு விழா

14—9—57 மாலை 6-30 மணிக்கு, உடுமலைப்பேட்டை பகுத்தறிவு மன்றக் கட்டிடத்தின் திறப்புவிழா தங்கம்மாள் ஓடை அண்ணா திடலில் தோழர் மா. கிருட்டினன் தலைமையில் நடைபெறும். தோழர் டி. கே. சீனிவாசன் திறந்து வைப்பார். தோழர் மா. சு. மணியம் கொடியேற்றுவார். உடுமலை நாராயணன் மற்றும் பலர் பேசுவர். மாலை 4 மணிக்கு தோழர் நெடுமாறன் தலைமையில் ஊர்வலம் உண்டு.

கி. மனோகரன்

சுற்றுப்பயணம்

செப். 13 : சோழபுரம்
14 : திருவொற்றியூர்
15 : திருச்சி (காலை)
கும்பகோணம் (மாலை)
16 : மதகுசாலை
17 : திருவையாறு
18 : குணசேகரம்
19 : பெரம்பலூர்
21, 22 : திருவண்ணாமலை மாநாடுகள்
26, 27, 28, 29 : கோவை ஒட்டிய பகுதிகள்
அக். 3 : சோழவந்தான்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெற்றது. ஆசிரியர் : இரா. நெடுஞ்[illegible]